DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

| | | |
|---|---|---|
| Name | : ரகமத்பீ | **CC. 339/2017** |
| Father's/Husband's Name | : நூரல்லா | |
| Village | : மூங்கில்துரைப்பட்டு | |
| Taluk | : | |
| Caste | : | Prosecution – PW1 |
| Calling | : | Defence - |
| Religion | : | Court - |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வேலைக்கு செல்லவில்லை, வீட்டில்தான் இருக்கிறேன். எனது கணவர் வெளிநாட்டில் பணிபுரிகிறார், தற்போது ஊருக்கு வந்துள்ளார். ரவுதி நாட்டிலுள்ள எங்கள் மதக்கோவிலுக்கு சென்று வரும் பயணத்திற்கு உமரா என்று பெயர். உமரா பயணத்திற்கு பெண்கள் தனியாக செல்லமுடியாது என்றால் சரிதான். உமரா பயணம் செல்ல வேண்டும் என்று எனது சித்தப்பா மூசா என்னை அழைத்தார். மூசா காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். மூசா மூலமாகத்தான் நான் 1ம் எதிரியை கள்ளக்குறிச்சியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தேன் என்றால் சரிதான். மூசாவுடன் சேர்ந்து நானும், எனது மகன் மற்றும் மாமியார் ஆகியோர்கள் உமரா பயணத்திற்கு திட்டமிட்டிருந்தோம், ஆனால் யாரும் செல்லவில்லை. மூசா அவரது மனைவிக்கும் சேர்ந்து உமரா பயணத்திற்கு பணம் கட்டியிருந்தார், அவர்களும் செல்லவில்லை. (End of Para)

2. சவுதிக்கு விசா வாங்கினால்தான் செல்ல முடியும் என்றால் சரிதான், அதற்காகத்தான் 1ம் எதிரியிடம் பணம் கட்டியிருந்தோம். அந்த பயணத்திற்கு எங்களுக்கு விசா வந்ததா என்றால் விசாவும், டிக்கெட்டும் வரவில்லை. 1ம் எதிரி நானும், எனது மகனும் பயணம் செய்வதற்காக 2016ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விசா வாங்கிக்கொடுத்தார் என்றாலும், எனது மகனின் கல்லூரியில் விடுப்பு மற்றும் பாஸ்போர்ட் கிடைக்கவில்லை என்பதால் நாங்கள் அந்த பயணத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையின்போது எனது மகன், மாமியார் மற்றும் எனது பாஸ்போர்ட்டை கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. எனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். (End of Para)

3. எனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்வதால் விசா பற்றியும், பாஸ்போர்ட் பற்றியும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் எப்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் எனது கணவரை கேட்டுவிட்டு தாக்கல் செய்கிறேன். 2016ம் ஆண்டு எனக்கும், எனது மகன் மற்றும் மாமியாருக்கும் உமரா செல்வதற்கு டிக்கெட் மற்றும் விசா தயாராக இருந்தது என்றாலும், எங்களது இயலாமையால் நாங்கள் தான் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. மீண்டும் விசா எடுத்தால் தனியாக செலவாகும் என்று 1ம் எதிரி என்னிடம் சொன்னார் என்றாலும், அதற்கு நான் பணத்தை கட்டிவிடுகிறேன் என்றாலும் சரியல்ல, அவர் கேட்டார், நான் ஏற்கனவே பணத்தை கொடுத்துவிட்டதால் முடியாது என்று சொல்லிவிட்டேன். (End of Para)

4. நான் இரண்டாவது முறையும் பணம் கட்டுகிறேன் என்று ஒத்துக்கொண்டதால், 1ம் எதிரி எங்களது பேச்சை நம்பிக்கொண்டு 2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் எங்கள் மூவருக்கும் விசா வாங்கினார் என்றாலும் சரியல்ல. அவ்வாறு டிக்கெட் மற்றும் விசா போட்டுவிட்டு 1ம் எதிரி சென்னை விமான நிலையத்தில் காத்திருந்தார் என்றாலும், நாங்கள் மூவரும் அங்கு சென்றோம் என்றாலும், எங்களிடம் அதற்கான பணத்தை 1ம் எதிரி கேட்டதற்கு, நாங்கள் பணத்தை தரவில்லை என்றாலும் சரியல்ல, நாங்கள் விமான நிலையத்திற்கு 1ம் எதிரி டிக்கெட் போட்டுவிட்டேன் என்று சொன்னதை நம்பி சென்றோம், அங்கு 1ம் எதிரி பணம் இல்லாததால் டிக்கெட் போடவில்லை என்று தெரிவித்தார். விமான நிலையத்தில் எங்களுக்கும், 1ம் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு விமான நிலைய காவல் நிலையத்திற்கு எங்களை அழைத்துச்சென்றார்கள் என்றால் சரிதான். (End of Para)

5. அன்றையதினமே 1ம் எதிரி அழைத்துவந்த வேறு 13 நபர்கள் உமராவிற்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் 1ம் எதிரியிடமிருந்த எங்களது பாஸ்போர்ட் மற்றும் விசாவை எங்களிடம் போலீசார் வாங்கிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சனை செய்ததால் 1ம் எதிரியால் மேற்படி தேதியில் மேற்படி 13 நபர்களுடன் உமராவிற்கு செல்ல இயலவில்லை என்றாலும், அதனால் 1ம் எதிரி 2 நாட்கள் கழித்துதான் உமராவிற்கு சென்றார் என்றாலும் சரியல்ல. விசா பணம் கட்டிதான் எடுக்க இயலும் என்றால் சரிதான். முதல்முறை எங்களால் பயணம் தடை பட்டதால் இரண்டாம் முறை விசா எடுத்ததற்கு நாங்கள் தான் 1ம் எதிரிக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். (End of Para)

6. 1ம் எதிரி சொல்லியதின் அடிப்படையில் சென்னையில் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள பெயர் தெரியாத ஒரு நபரிடமிருந்து எனது பாஸ்போர்ட்டை நான் பெற்றுக்கொண்டேன். 1ம் எதிரி உமரா பயணத்திற்கு சென்று வந்தபிறகு நானும், எனது ஆட்களும் 1ம் எதிரியின் அலுவலகத்தை தாக்கினோம் என்றாலும், அவ்வாறுதான் எனது பாஸ்போர்ட் என்னிடம வந்தது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி உமராவிலிருந்து வந்தபிறகு நான் த.மு.க-வை சேர்ந்த 3 நபர்களை 1ம் எதிரியின் அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு அலுவலகத்தை நாங்கள்

தாக்கி ஆவணத்தை எடுத்துக்கொண்டதால் 1ம் எதிரி எங்கள் மீது கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. (End of Para)

7. எனது சித்தப்பா மூசா காவல் துறையில் இருந்த அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல எனது பாஸ்போர்ட்டை நான் பெறவில்லை என்றாலும், 1ம் எதிரியின் அலுவலகத்திலிருந்துதான் எனது பாஸ்போர்ட்டை எடுத்ததால் பெயர் தெரியாத நபரிடம் வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 முறை எனக்கு விசா எடுக்கப்பட்டது தெரியவரும் என்பதால்தான் எனது பாஸ்போர்ட்டை எனது சித்தப்பாவின் அதிகாரத்தை பயன்படுத்தி இந்த வழக்கிலிருந்து மறைத்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. நாங்கள்தான் 1ம் எதிரிக்கு பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு எனது சித்தப்பாவின் அதிகாரத்தை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. (End of Para)

8. இந்த வழக்கு சம்பந்தமாக நான் புகாரை விமான நிலையத்தில் பிரச்சனை ஏற்பட்ட நான்கு மாதங்கள் கழித்து கொடுத்தேன். புகார் கொடுக்கப்பட்ட பின்பு போலீசார் என்னை விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் உமரா போவதாக இருந்தது எனது கணவர், சித்தப்பா, மகன் மற்றும் மாமியார் ஆகியோர்களை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். 1ம் எதிரியின் அலுவலகத்திற்கு நான் எனது சித்தப்பா, சித்தி, மகன் மற்றும் மாமியார் ஆகியோர் வந்து பணம் கொடுத்தோம். 1ம் எதிரி கொடுத்த புகாரின் பெயரில் நாங்கள் விழுப்புரம் எஸ்.பி அலுவலகத்திற்கு விசாரணைக்கு சென்றோம் என்றால் சரிதான். அந்த விசாரணையிலும் விசாக்கான பணத்தை நாங்கள் கட்டவேண்டும் என்று தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் மீண்டும் எடுத்த விசாவிற்கான கட்டணத்தை செலுத்தாததால்தான் உமரா பயணத்திற்கு செல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எனது புகாருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. (End of Examination)

J HARIHARASUDHAN
Digitally signed by J HARIHARASUDHAN
Date: 2024.02.22 16:36:17 +0500

DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

| | | |
|---|---|---|
| Name | : பியாரிஜான் | **CC. 339/2017** |
| Father's/Husband's Name | : கபூர் | |
| Village | : மூங்கில்துரைப்பட்டு | |
| Taluk | : | |
| Caste | : | Prosecution – PW2 |
| Calling | : | Defence - |
| Religion | : | Court - |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது உறவினர் மூசா பண்ண ஏற்பாட்டின் பெயரில் நாங்கள் உமரா செல்ல தயார் ஆனோம் என்றால் சரிதான். உமரா பயணத்திற்கான அனைத்தையும் எனது மருமகள் தான் பார்த்து கொண்டார் என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். உமரா பயணத்திற்கு பணம் கொடுத்தது பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது மருமகள் சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். விமான நிலையத்தில் 1ம் எதிரியை தாக்கியது பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஆனால் தகராறு செய்தது தெரியும். உமரா பயணம் செல்லாதது குறித்து நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. ஏற்கனவே நீதிமன்றத்திற்கு வந்தபோது எனது மருமகள் சொல்லியதை போலதான் நான் சாட்சியம் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியதுபோல எதிரிகள் எங்களை ஏமாற்றவில்லை என்றாலும் எனது மருமகள் சொல்லி கொடுத்து அவருக்கு நான் அனுசரனையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாஸ்போட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நான் தயாராக உள்ளேன். அதை எப்போது கொடுக்க இயலும் என்று எனது மருமகளை கேட்டால் தான் தெரியும். (End of Examination)

J HARIHARASUDHAN
Digitally signed by J HARIHARASUDHAN
Date: 2024.02.22 16:36:25 +0500

DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

| | | |
|---|---|---|
| Name | : சாதிக்பாஷா | **CC. 339/2017** |
| Father's/Husband's Name | : நூரல்லா | |
| Village | : மூங்கில்துரைப்பட்டு | |
| Taluk | : | |
| Caste | : | Prosecution – PW3 |
| Calling | : | Defence - |
| Religion | : | Court - |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2016ம் ஆண்டு எனது அம்மாவும், பாட்டியும் உமரா செல்ல வேண்டும் என்றும், அதற்கு நான் உதவியாக செல்ல வேண்டும் என்று திட்டம் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த நேரத்தில் நான் கல்லூரியில் படித்து கொண்டிருந்தேன் என்றாலும் எனது தந்தை வெளிநாட்டில் இருந்தார் என்றாலும் சரிதான். உமரா பயணம் குறித்து முடிவு செய்துவிட்டு எனது அம்மா தான் எனக்கு தகவல் சொன்னார் என்றால் சரிதான். அவ்வாறு முடிவு செய்தபோது என்னிடம் பாஸ்போர்ட் இருக்கவில்லை என்றால் சரியல்ல இருந்தது. நான் 2014ம் ஆண்டு பாஸ்போர்ட் எடுத்தேன். எனது அம்மா, பாட்டி எனது பாஸ்போர்ட்க்களில் உமரா செல்வதற்கான இரண்டு வீசாக்கள் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் அடுத்த வாரம் ஆஜர்படுத்த தயாராக உள்ளேன். நான் உமரா திட்டத்தின்போது வெளியூரில் படித்து கொண்டிருந்ததால் அதற்கான ஏற்பாடுகள் குறித்து எனது அம்மா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். (End of Para)

2. இரண்டாவது வீசா எடுப்பதற்கு கூடுதல் கட்டணம் கட்டவேண்டும் என்று 1ம் எதிரி சொன்னார் என்றால் சரிதான். இரண்டாவது முறை பணம் கட்டாததால் தான் எங்களால் உமரா செல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எங்களை உமரா அழைத்து செல்வதாக 1ம் எதிரி சொன்னதால் நாங்கள் விமான நிலையத்திற்கு சென்றோம், ஆனால் 1ம் எதிரி அங்கு எங்களை பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு காணாமல் போய் விட்டார். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது நான் போகவில்லை. புகார் கொடுத்த பின்பு போலிசார் அ.சா1ஐ விசாரித்தாக அ.சா1 சொன்னார். ஆனால் எப்போது விசாரணை செய்தார்கள் என்று நியாபகம் இல்லை. அந்த சமயத்தில் நான் கல்லூரியில் படித்து கொண்டிருந்தேன் என்றாலும் அ.சா1ஐ விசாரணை செய்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையின்போதுதான் போலிசாரை இந்த வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் முதன்முதலாக பார்த்தேன் என்றால் சரிதான். (End of Para)

3. அன்றைய தினம் வழக்கு பற்றி அ.சா.1ம் போலிசாரும் சொன்னார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளித்தேன் என்றாலும் சரிதான். எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் என்னால்தான் முதல்முறை பயணம் தடைபட்டது என்றாலும் 2ம் முறை பயணம் செய்ய கட்டணம் கட்டாததால் தான் எங்களால் செல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல, முதல்முறை1ம் எதிரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததால் எங்களை அழைத்து செல்ல முடியாது என்று தெரிவித்தார், 2ம் முறை ஏர்போட்டிற்கு வரவழைத்துவிட்டு அவர் கிளம்பி விட்டார். 1ம் எதிரியின் அலுவலகத்தை எனது அம்மாவும், சிலரும் தாக்கி ஆவணங்களையும் பாஸ்போட்டையும் எடுத்துச் சென்றார்கள் என்றாலும், அது சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாரில் இருந்து தப்பித்து கொள்வதற்கான எனது அம்மா பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அந்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. (End of Examination)

J HARIHARASUDHAN

Digitally signed by J HARIHARASUDHAN
Date: 2024.02.22 16:36:37 +0500